# குழித்துறை நகராட்சி

குழித்துறை நகர்மன்றத்தின் **அவசரக்கூட்டம்** 29-10-2025 **புதன்கிழமை மாலை** 3.30 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15-ல் அட்டக்குளம் ஜங்ஷன் முதல் காமனாட்டுவிளை சாலை வரையுள்ள மழைநீர் வடிகால் குறுகியதாக இருப்பதால் மழைக்காலங்களில் வடிகால் நிரம்பி சாலையில் செல்வதால் பொதுமக்களுக்கு இடையூறாகவும், தொற்று ஏற்படும் அபாயமும் ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மழைவடிகாலை விரிவுபடுத்திட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.7.30 இலட்சம் (ரூபாய் ஏழு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண். /2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1603 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 2

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பூங்காவில் செடிகள் வைத்துஅழகுபடுத்தும் விதமாக அரளி, பெதஸ்தோமா, ஜிஜிளியா போன்ற செடிவகைகள் ஸ்ரீ லட்சுமி நர்சரி கார்டனிலிருந்து வாங்கிய வகைக்கு ரூ.10,720/- இந்நகராட்சி தூய்மை பணி மேற்பார்வையாளர் திரு. ராதாகிருஷ்ணன் அவர்களால் செலவு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை அன்னாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். /2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1604 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 3</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20-ல் தினசரி காய்கறி சந்தை தற்போது நவீன தினசரி சந்தையாக KNMT 2023-2024 திட்டத்தின்கீழ் பணி நடைபெற்று வருகிறது. தற்பொழுது பணி முடியும் தருவாயில் உள்ளது. சந்தையின் வடக்கு பகுதியில் அங்கன்வாடி மையம் அமைந்துள்ளது. அக்கட்டிடம் மிகவும் மோசமாக பழுதடைந்து உள்ளதால் அந்த அங்கன்வாடி கட்டிடத்தை புதியதாக அரசு திட்ட நிதியின்கீழ் கட்டுவதற்கு அனுமதி கேட்டு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. எனவே அங்கன்வாடி கட்டிடத்தின் முன்பகுதியில் நந்தன்காடு சாலை அமைந்துள்ளதால் அக்கட்டிடத்தை புதியதாக கட்டுவதற்கு 2 காங்கிரீட் Roof அமைக்க வேண்டி இருப்பதால் காய்கறி சந்தையின் உள்பகுதியிலிருந்து சாலை மட்டத்திற்கு Roof மற்றும் அங்கன்வாடி கட்டிடத்தின் மேல் Roof போட வேண்டியுள்ளது. எனவே காய்கறி சந்தை முழுமை அடையும் போது இப்பகுதியை சரி செய்வதற்கும் கீழ் இருந்து சாலை மட்டத்திற்கு Roof போடுவதற்கும் மதிப்பீடு ரூ.25.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண். /2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1605 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடியிருப்பு பயன்பாடு, வணிகம் பயன்பாடு மற்றும் தொழில் நிறுவனங்கள் பயன்பாடுக்கான 2025-2026 இரண்டாம் அரையாண்டு சொத்துவரியை 31-10-2025-ம் தேதிக்குள் செலுத்துவர்களுக்கு 5% ஊக்க தொகை வழங்கப்படும் என தினசரி நாளிதழில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் காணொலி ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளபடி விளம்பரம் செய்யப்பட்டது. மேலும் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு பட்டியல் தொகை கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ளது.

1) தினமலர் - 5670
2) மதுரைமணி - 13406

எனவே மேற்படி தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.706/2024/அ1.

மன்றத்தீர்மான எண்.1606 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 5

குழித்துறை நகராட்சி 79-வது சுதந்திர விழா முன்னிட்டு நகராட்சி வளாகத்தில் ஒலிபெருக்கி அமைத்த வகைக்கு Nishanth Electrical Sounds என்ற நிறுவனத்திலிருந்து தொகை ரூ.7000/- வரப்பெற்றது. மேற்படி தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3256/2025/எச்1.

மன்றத்தீர்மான எண்.1607 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 6

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பி.பி.முனிசாமி வணிகவளாகத்தின் தென்மேற்கு பகுதி தேங்காய்பட்டணம் சாலையை ஒட்டி புல எண்.C4/44-ல் காலியாக உள்ள 8 x 10 = 80 சதுர அடி காலி இடத்திற்கான ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 28-10-2025 அன்று நடைபெறும் விபரத்தினை செய்தி மக்கள் தொடர்புத்துறை, நாகர்கோவில் மூலம் தினசரி செய்தி நாளிதழான மதுரை மணி செய்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு பட்டியல் தொகை ரூ.24,360/- வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை உரிய செய்தி நாளிதழுக்கு பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.1079/2024/அ2.

மன்றத்தீர்மான எண்.1608 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 7

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் புதிய காய்கறி சந்தையில் அமைந்துள்ள கடை எண்.46 முதல் 56 வரையுள்ள கடைகளை வாழை தார் வியாபாரம் மட்டும் செய்ய இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1520, நாள் 06-10-2025-ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்பொழுது மார்த்தாண்டம் காய்கறி சந்தையில் ஏற்கனவே வாழைதார் வியாபாரம் செய்து வந்த வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வண்ணம் அவர்களின் கோரிக்கையினை ஏற்று அரசாணை (2ப) எண்.66, நாள் 06-08-2024 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை-ன்படி பக்கம் எண்.4 பத்தி எண்.(X)-ல் தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படி மார்த்தாண்டம் புதிய காய்கறி சந்தையில் அமைந்துள்ள மொத்த கடைகளின் சராசரி வாடகை மதிப்பின் அடிப்படையில் (Average Value of Open Tender) வாடகையினை நிர்ணயம் செய்து ஏற்கனவே பழைய காய்கறி சந்தையில் வாழை தார் வியாபாரம் செய்து வந்த வியாபாரிகளில் ஒருவருக்கு ஒருகடை என்ற அடிப்படையில் குலுக்கல் முறையில் வெளிப்படை தன்மையுடன் 75 முதல் 84 வரையுள்ள கடையினை வாழை தார் வியாபாரம் செய்திட ஏதுவாக மாற்றம் செய்து ஒப்படைப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3978/2025/அ2.

மன்றத்தீர்மான எண்.1609 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 8

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் புதிய காய்கறி சந்தையில் அமைந்துள்ள கடை எண்.65 முதல் 74 வரையுள்ள கடைகளை ஏற்கனவே மார்த்தாண்டம் காய்கறி சந்தையின் உள்பகுதியில் செயல்பட்டு வந்த IDSMT கடைகளில் இருந்த வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வண்ணம் அவர்களின் கோரிக்கையினை ஏற்று அரசாணை (2ப) எண்.66, நாள் 06-08-2024 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை-ன்படி பக்கம் எண்.4 பத்தி எண்.(X)-ல் தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படி மார்த்தாண்டம் புதிய காய்கறி சந்தையில் அமைந்துள்ள மொத்த கடைகளின் சராசரி வாடகை மதிப்பின்

அடிப்படையில் (Average Value of Open Tender) வாடகையினை நிர்ணயம் செய்து ஏற்கனவே IDSMT கடையில் வாடகை தொகை நிலுவையின்றி செலுத்தி வந்த வியாபாரிகளில் ஒருவருக்கு ஒருகடை என்ற அடிப்படையில் குலுக்கல் முறையில் வெளிப்படை தன்மையுடன் ஒப்படைப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3978/2025/அ2.

மன்றத்தீர்மான எண்.1610 - 65 முதல் 72 வரையிலான கடைகள் மாற்று திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்திருப்பதால் IDSMT கடைகளில் இருந்த வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் கடை எண்.73, 74 மற்றும் 38 முதல் 45 வரையிலான கடைகள் ஒதுக்கீடு செய்து அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி..